# FORM-3
# MINUTES OF THE COUNCIL MEETINGS
## (See rule 5 and Serial Number 3 of Appendix - I)
## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 2012 மே திங்கள் 31.05.2012–ம் நாள் வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

முன்னிலை:
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்.

**பொருள் எண்.1**
குளச்சல் நகராட்சியின் 2011–12 ஆம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.
**அ.குறிப்பு** : பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.சி1/1921/2004)

## குளச்சல் நகராட்சி

**2011–2012–ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை**

### 1. அமைப்பும் மேலாண்மையும்

**1. ஆட்சி அமைப்பு (Jurisdiction)**

குளச்சல் நகராட்சி திருவிதாங்கூர் கொச்சி மாகாணத்தில் இருந்த போது 1920–ம் ஆண்டு மூன்றாம் நிலை நகராட்சியாக தோற்றுவிக்கப்பட்டது. அரசாணை நிலை எண்.85 (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை) நாள் 22.8.1998–ன்படி இரண்டாம் நிலை நகராட்சியாக உயர்த்தப்பட்டுள்ளது. பின்னர் அரசாணை நிலை எண்.238 (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை) நாள் 02.12.2008–ன்படி முதல் நிலை நகராட்சியாக உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

முதல்நிலை நகராட்சியில் பணியமர்த்தப்பட வேண்டிய பணியாளர்கள் விவரம் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண். 3141/2007/OP நாள் 07.10.2008–ன்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சி பொதுப் பிரிவில் பணியமர்த்தப்பட வேண்டிய பணியாளர்கள் விவரம் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

| பணியிடங்கள் விவரம் | | அரசாணையின்படி தோற்றுவிக்கப்பட வேண்டிய பணியிடங்கள் | தற்போது அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் | நிரப்பப்பட வேண்டிய புதிய பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | வருவாய் அலுவலர் வகுப்பு – IV | 1 | – | 1 |
| 2 | கணக்கர் (வகுப்பு – IV ) | 1 | – | 1 |
| 3 | உதவி கணக்கர் (வகுப்பு – V ) | 1 | – | 1 |
| 4 | உதவியாளர் (வகுப்பு – IV ) | 2 | – | 2 |

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | இளநிலை உதவியாளர் (வகுப்பு – VII ) | 8 | 3 | 5 |
| 6 | காசாளர் (வகுப்பு – VII ) | 1 | – | 1 |
| 7 | தட்டச்சர் (வகுப்பு – VII ) | 2 | 1 | 1 |
| 8 | வருவாய் ஆய்வாளர் (வகுப்பு – V ) | 1 | – | 1 |
| 9 | வருவாய் உதவியாளர் (வகுப்பு – VII ) | 4 | 3 | 1 |
| 10 | பொருள் காப்பாளர் (வகுப்பு – V ) (Store Keeper) | 1 | – | 1 |
| 11 | ஆவண எழுத்தர் | 1 | – | 1 |
| 12 | அலுவலக உதவியாளர் | 7 | 1 | 6 |
| 13 | உதவி திட்ட அமைப்பாளர் (கணனி) | 1 | – | 1 |
| 14 | புள்ளி விவர குறிப்பாளர் | 2 | 1 | 1 |
| 15 | அலுவலக இரவு காவலர் | 1 | – | 1 |
| 16 | ஓட்டுநர் | 6 | 3 | 3 |

**பொறியாளர் பிரிவில் நிரப்பப்பட வேண்டிய பணியிடங்கள்**

| பணியிடங்கள் விவரம் | | அரசாணையின்படி தோற்றுவிக்கப்பட வேண்டிய பணியிடங்கள் | தற்போது அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் | நிரப்பப்பட வேண்டிய புதிய பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | பொறியாளர் நிலை – 2 | 1 | நகராட்சிபொறியாளர் நிலை 3 | நிலையினை உயர்த்தப்பட வேண்டும்.1 |
| 2 | உ.பொ / இ.நி.பொ. | 2 | – | 2 |
| 3 | பணி ஆய்வர் | 3 | – | 3 |
| 4 | குழாய் ஆய்வர் | 2 | – | 2 |
| 5 | மின்பணியாளர் நிலை–2 | 2 | 1 | 1 |
| 6 | துலக்குநர் | 5 | – | 5 |
| 7 | மீட்டர் ரீடர் | 2 | – | 2 |
| 8 | குழாய் பொருத்துநர் நிலை– 2 | 2 | – | 2 |
| 9 | குழாய் திறப்பாளர் | 2 | – | 2 |
| 10 | மேல்நிலை நீர்தேக்க தொட்டி காவலர் | 5 | – | 5 |
| 11 | மின்கம்பியாளர் | 2 | 1 | 1 |
| 12 | மின்கம்பி உதவியாளர் | 2 | 1 | 1 |

குளச்சல் நகராட்சியின் பரப்பளவு 5.18 சதுர கி.மீ. 2001–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகராட்சியின் மக்கள் தொகை 23787 ஆகும். இதில் ஆண்கள் 11996,

பெண்கள் 11791. மொத்த மக்கள் தொகையில் எஸ்.சி./எஸ்.டி. வகுப்பினர் எண்ணிக்கை 602 (ஆண்கள் 293, பெண்கள் 309) 2011–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகராட்சியின் மக்கள் தொகை 23155 ஆகும். இதில் ஆண்கள் 11770, பெண்கள் 11385.

## 2. பணி அமைப்பு (Personal )

### அ. மன்றம்

இந்நகராட்சியில் உள்ள மொத்த வார்டுகளின் எண்ணிக்கை 24 ஆகும். இதில் பெண்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள 8 வார்டுகளில் 1 வார்டு எஸ்.சி. பெண்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. 16 வார்டுகள் பொதுவானவையாகும்.

பொது – வார்டு எண். 3, 4, 5, 7, 8, 9, 10, 11, 12, 14, 15, 17, 18, 20, 21, 22

பெண்கள் (பொது ) – வார்டு எண். 1, 2, 6, 13, 16, 19, 24

பெண்கள் (S.C.) – வார்டு எண். 23

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்மன்றம் செயல்பட்டு வருகின்றது. திரு.அ.நசீர் அவர்கள் நகர்மன்றத் தலைவராகவும், திரு.அ.ஜேசுராஜன் அவர்கள் நகர்மன்ற துணைத் தலைவராகவும் உள்ளனர். மொத்தம் 24 உறுப்பினர்கள் உள்ளனர்.

| வார்டு எண். | நகர்மன்ற உறுப்பினர் பெயர் |
|---|---|
| | திரு. நசீர் .அ. நகர்மன்ற தலைவர் |
| 5 | திரு.ஜேசுராஜன்.அ. நகர்மன்ற துணைத்தலைவர் |
| **நகர்மன்ற உறுப்பினர்கள்** | |
| 1 | திருமதி.விஜயராணி .றே |
| 2 | திருமதி.லதா.அ.தி |
| 3 | திரு.முகம்மது தாசிம் .நா |
| 4 | திரு.இப்ராஹீம்.அ |
| 5 | திரு.ஜேசுராஜன்.அ |
| 6 | திருமதி. அமலபுஷ்பம். பி |
| 7 | திரு.பென்சிகர் .கி |
| 8 | திரு.குருசையா.சூ |
| 9 | திரு.பிரான்சிஸ் அமலதாஸ்.ஏ |
| 10 | திரு.ஜெஸ்டின்ராஜ் .கி |
| 11 | திரு.ஜாண் லோப்பஸ்.க |
| 12 | திரு.லாரன்ஸ் .பி |

| | |
|---|---|
| 13 | திருமதி. ஜான்சி .தோ |
| 14 | திரு.சூசைமரியான்.சி |
| 15 | திருமதி.சிலுவைமேரி.லே |
| 16 | திருமதி.ஷெர்லி பிளாரன்ஸ் .ச |
| 17 | திரு.முருகன்.சொ |
| 18 | திரு.சாதிக் .அ |
| 19 | திருமதி.கோமளா .அ |
| 20 | திரு.அப்துல் ரஹீம் .மு |
| 21 | திரு.நூறுமுகம்மது .மு. |
| 22 | திரு.சாகுல் ஹமீது .மு |
| 23 | திருமதி. லதா. கு |
| 24 | திருமதி. சாந்தி. ஜெ. |

**ஆணையாளர்**

அறிக்கைக்குட்பட்ட காலத்தில் 01.04.2011 முதல் 01.02.2012 முடிய திரு.அ.சர்தார் ஆணையராக பணியாற்றியுள்ளார். 02.02.2012 முதல் 31.03.2012 முடிய திரு.எஸ்.சுரேஷ், நகராட்சி பொறியாளர் ஆணையர் (பொ) பணியாற்றி வந்தார்.

**3. தேர்தல்**

அறிக்கைக்குட்பட்ட காலத்தில் உள்ளாட்சி தேர்தல் நடைபெற்றது.

**4. நகர்மன்றக் கூட்டங்கள்**

அறிக்கையாண்டில் நகர்மன்றக்கூட்டங்கள் முறையாகவும், சீராகவும் நடைபெற்றுள்ளது. அறிக்கையாண்டில் நடைபெற்றுள்ள கூட்டங்கள் மற்றும் முடிவு செய்யப்பட்டுள்ள பொருள்கள் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| கூட்டத்தின் தன்மை | நடைபெற்ற கூட்டங்களின் எண்ணிக்கை | முடிவு செய்யப்பட்ட பொருள்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| சாதாரணக்கூட்டம் | 9 | 117 |
| அவசரக்கூட்டம் | 13 | 172 |
| சிறப்புக்கூட்டம் | 2 | – |

**5. குழுக்கள்**

வரிமேல் முறையீட்டுக்குழு, நியமனக்குழு மற்றும் ஒப்பந்தக்குழுக்களால் கீழ்கண்ட விவரப்படி பொருள்கள் முடிவு செய்யப்பட்டுள்ளன.

| குழுவின் பெயர் | நடைபெற்ற கூட்டங்களின் எண்ணிக்கை | முடிவு செய்யப்பட்ட பொருள்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| வரிமேல்முறையீட்டுக்குழு | – | – |
| நியமனக்குழு | – | – |
| ஒப்பந்தக்குழு | – | – |

திருமதி.அ.தி.லதா அவர்கள் நியமனக்குழு உறுப்பினராகவும், திருமதி.தே.விஜயராணி அவர்கள் ஒப்பந்தக்குழு உறுப்பினராகவும் இருந்தனர். திருமதி.அ.கோமளா, திரு.அ.சாதிக், திருமதி.ஜெ.சாந்தி, திரு.சி.சூசைமரியான் ஆகியோர்கள் வரி மேல்முறையீட்டுக்குழு உறுப்பினர்களாகவும் இருந்து வருகிறார்கள்.

**6. <u>நிர்வாகம் (பொதுப்பிரிவு)</u>**

அறிக்கையாண்டில் 01.04.2011 முதல் 03.07.2011 வரை மேலாளர் பணியிடம் காலியாக இருந்தது. 04.07.2011 முதல் 08.02.2011 வரை திருமதி. எம்.ஆர்.வசந்தி, மேலாளராக பணிபுரிந்துள்ளார்.

**பொதுப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ள பணியிடங்கள் விவரம் கீழ்வருமாறு :**

| | |
|---|---|
| மேலாளர் | 1 |
| இளநிலை உதவியாளர் | 2 – (காலியிடம் – 1) |
| தட்டச்சர் | 1 |
| அலுவலக உதவியாளர் | 1 |
| புள்ளிவிவர குறிப்பாளர் | 1 |
| வருவாய் உதவியாளர்கள் | 3 |

அறிக்கையாண்டில் பணியாளர்களின் ஊதியமாக ரூ.15,83,940/– செலவிடப்பட்டுள்ளது.

**<u>ஆ. பொறியியல் பிரிவு</u>**

**<u>பணியாளர்கள் விவரம்</u>**

இந்நகராட்சியின் பொறியியல் பிரிவில் கீழ்க்கண்ட பணியாளர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(1) நகராட்சி பொறியாளர் நிலை–III - 1

(2) பொது;ப்பணி மேற்பார்வையாளர் – 1

(3) மின்பணியாளர் நிலை –II -- 1

அறிக்கை ஆண்டில் பணியாளர்கள் உத்தேச செலவினம் ரூ. 7,39,200/–ஆகும்.

**<u>சாலைகள், பாலங்கள் மற்றும் தோணி துறைகள்</u>**

இந்நகராட்சிப் பகுதிக்குள் தேசிய நெடுஞ்சாலை எதுவும் இல்லை. இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட சாலைகளின் மொத்த நீளம் **32.21** கி.மீ. இந்நகராட்சி எல்கைக்குள் நெடுஞ்சாலை மற்றும் ஊரகப்பணித் துறையினரால் பராமரிக்கப்படும் சாலைகளின் மொத்த நீளம் **17.582** கி.மீ. சாலை பராமரிப்புக்கென தனியாக பணியாளர் யாரும் இல்லை. பொது சுகாதாரப் பணியாளர்களைக் கொண்டு பராமரிப்புப் பணி நடைபெற்று வருகின்றன.

| வ.எண். | சாலையின் விவரம் | 31.3.2012–ன்படி |
|---|---|---|
| 1. | சிமெண்ட் சாலை | 22.16 கி.மீ. |
| 2. | கருந்தள சாலை | 7.27 கி.மீ. |
| 3. | ஜல்லி சாலை | 0.21 கி.மீ. |
| 4. | மண் சாலை | 2.57 கி.மீ |
| | **மொத்தம்** | **32.21 கி.மீ.** |

(இ) தெருவிளக்கு

தெருவிளக்கு பராமரிப்பில் கீழ்கண்ட பணியாளர்கள் தொடர்ந்து பணிபுரிந்து வருகின்றனர்.

1. மின் கம்பியாளர் 1

2. மின்கம்பி உதவியாளர் 1

இத்தலைப்பின்கீழ் அறிக்கை ஆண்டில் பணியாளர் செலவினம் ரூ.2,79,650/– மின்விளக்கு உபகரணங்கள் வாங்க ரூ.2,06,806/– செலவு செய்யப்பட்டுள்ளது. மின்கட்டணமாக ரூ.40,56,740/– தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது. அறிக்கையாண்டின் இறுதியில் கீழ்கண்டவாறு தெருவிளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

| வ. எண் | விளக்குகள் விவரம் | 1.4.2011–ல் உள்ளபடி | நீக்கம் | சேர்க்கை | 31.3.2012–ல் உள்ளபடி |
|---|---|---|---|---|---|
| 1 | பாதரச விளக்கு | – | – | – | – |
| 2 | சோடியம் ஆவிவிளக்கு | 92 | – | – | 92 |
| 3 | 40 வால்ட் குழல் விளக்கு | 1309 | – | – | 1309 |
| | மற்றவை | 9 | – | – | 9 |

அ) இந்நகராட்சிப் பகுதியில் பெரிய பாலங்கள் எதுவுமில்லை.

ஆ) அறிக்கை ஆண்டில் பெரிய பாலங்கள் எதுவும் கட்டப்படவில்லை

இ) இந்நகராட்சியில் பெரிஸ் ( **Ferries**) எதுவும் கட்டப்படவில்லை

உ) தங்கும் விடுதிகள், சத்திரங்கள் மற்றும் தண்ணீர் பந்தல்கள்

இந்நகராட்சியில் மேற்காணும் யாவும் பராமரிக்கப்படவில்லை. பொதுப்பணித் துறையினரால் பயணிகள் விடுதி மட்டும் பராமரிக்கப்பட்டு வருகின்றது

**10. <u>தளவாடச் சாமான்கள்</u>**

அறிக்கை ஆண்டில் இந்நகராட்சியில் தளவாடச் சாமான்கள் வாங்குவதற்காக செலவுகள் எதுவும்
மேற்கொள்ளப்படவில்லை.

**11. <u>தெருவிளக்குகள்</u>**

இந்நகராட்சி பகுதியிலுள்ள தெருவிளக்குகள் அனைத்தும் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

## III. கல்வி

**12. <u>கல்வி வரி</u>**

நகராட்சி எல்கைக்குள் தனியாரால் 7 பள்ளிகளும், அரசினரால் 6 பள்ளிகளும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்நகராட்சியின் பராமரிப்பில் பள்ளிக் கட்டிடம் எதுவும் இல்லை.

13. மாணவர்கள் எண்ணிக்கையும் திறமையும் – கேள்வி எழவில்லை

**14.** பயிற்றுவிக்கும் பணியாளர்கள் – கேள்வி எழவில்லை

**15.** இடவசதியும் சாதனங்களும் – கேள்வி எழவில்லை

**16.** (1) ஆரம்பப்பள்ளி – கேள்வி எழவில்லை

(2) இடைநிலைக் கல்வி – கேள்வி எழவில்லை

**17. <u>பள்ளிகளின் எண்ணிக்கையும் வசதிகளும்</u>**

இந்நகராட்சியின் பராமரிப்பில் மேல்நிலைப் பள்ளிகளோ, உயர்நிலைப் பள்ளிகளோ எதுவும் இல்லை.
தனியாரால் 2 மேல்நிலைப் பள்ளிகளும், அரசால் 1 உயர் நிலைப் பள்ளியும் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

**18.** கல்வித் திறமை கேள்வி எழவில்லை
**19.** பணியாளர்கள் கேள்வி எழவில்லை
**20.** இடவசதிகள் கேள்வி எழவில்லை
**21.** நிதி ஆதாரம் கேள்வி எழவில்லை

**22.** <u>சிறப்புப் பள்ளிகள்</u>

நகராட்சியால் சிறப்புப் பள்ளி அல்லது வாசக சாலை எதுவும் பராமரிக்கப்படவில்லை மாவட்ட நூலக ஆணைக் குழுவினரால் ஒரு பொது நூலகம் மட்டும் பராமரிக்கப்பட்டு வருகின்றன.
தனியாரால் தனிப் பயிற்சி கல்லூரிகளும் (**Tutorial College**) குழந்தைகளுக்கு
ஒரு கான்வென்ட் பள்ளியும் ஒரு அராபிக் கல்லூரியும் நடத்தப்பட்டு வருகின்றன.

**வானொலிப்பெட்டி மற்றும் தொலைக்காட்சிப் பெட்டிகள்**

வானொலிப் பெட்டி மற்றும் தொலைக்காட்சி பெட்டிகள் எதுவும் பராமரிக்கப்படவில்லை.

**புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்**

இந்நகராட்சியில் கீழ்கண்ட 11 இடங்களில் குழந்தைகள் நல மையங்கள் இயங்கி வருகின்றன.

1) சாஸ்தாங்கரை
2) செக்காலத்தெரு
3) அஞ்சாலிவிளை
4) களிமார்
5) கொட்டில்பாடு–1
6) கொட்டில்பாடு–2
7) மரமடி–1
8) மரமடி–2
9) துறைமுகத்தெரு–1
10) துறைமுகத்தெரு–2
11) துறைமுகத்தெரு–3

அறிக்கையாண்டில் 11 குழந்தைகள் நல மையங்கள் நகராட்சி சொந்த கட்டிடங்களில் இயங்கி வருகின்றன.

**14) பள்ளி சத்துணவு மையங்கள்**

பள்ளி சத்துணவு மையங்கள் எதுவும் நகராட்சி கட்டுப்பாட்டில் இல்லை.

## 1. பொது சுகாதாரம்

**i) மருத்துவ நிவாரணம்**

இந்நகராட்சியில் மருத்துவமனைகள் அல்லது மருந்தகங்கள் எதுவும் பராமரிக்கப்படவில்லை. ஒரு
அரசு மருத்துவமனையும், 10 தனியார் மருத்துவமனைகளும் நகரில் செயல்பட்டு வருகின்றன.

**ii) அமைப்பும் பணியாளர்களும்**

இந்நகராட்சியில் நகர்நல அலுவலர் பணியிடம் இல்லை.

**iii) சிறப்புத்திட்டம்** – எதுவுமில்லை.

(1) மருத்துவப் பயிற்சிக்கு உதவித் தொகை வழங்கல் – எதுவுமில்லை.

24) நோயாளிகள் – கேள்வி எழவில்லை

25) வசதிகள் – கேள்வி எழவில்லை

## 6) பொதுசுகாதாரப் பணியாளர்கள் விவரம்

பொது சுகாதாரப் பிரிவில் கீழ்கண்ட பணியிடங்கள் அரசினால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

1) துப்புரவு அலுவலர் – 1
2) துப்புரவு ஆய்வாளர் – 1
3) துப்புரவு மேற்பார்வையாளர் – 4
4) துப்புரவு பணியாளர்கள் – 50 – (காலியிடம் – 4)
5) மகப்பேறு உதவியாளர் – 1
6) மகப்பேறு ஆயா – 1
7) ஓட்டுநர்கள் – 3
8) சமுதாய அமைப்பாளர் – 1

அறிக்கையாண்டில் பொது சுகாதாரப் பிரிவில் பணியாளர்கள் ஊதியம் மற்றும் இதர செலவினம் ரூ. 28,94,028/– ஆகும்.

## 27) மகப்பேறு நிவாரணம்

இந்நகராட்சியில் மகப்பேறு உதவியாளர் ஒருவரும், ஒரு மகப்பேறு ஆயாவும் பணிபுரிந்து வருகிறார்கள்.

## 28) பிறப்பு இறப்பு விபரம் 2010–2011

| | | |
|---|---|---|
| இறப்புகளின் எண்ணிக்கை | – | 193 |
| பிறப்புகளின் எண்ணிக்கை | – | 679 |
| இறந்து பிறந்தவை | – | 5 |
| சிசு மரணம் | – | இல்லை |
| பேறுகால இறப்பு | – | இல்லை |

## 2010–11–ல் தடுப்பு மருந்து போட்ட விவரம்

| மருந்து | | தடுப்பு மருந்து போட்ட குழந்தைகள் |
|---|---|---|
| Hepatits – B | - | 773 |
| T.T. | - | -- |
| D.P.T. | - | 1385 |
| Polio | - | 5394 |
| B.C.G. | - | 820 |
| Measles | - | 576 |

## 29. சுகாதாரம்

துப்புரவுப் பணிக்கு 4 மினி டிப்பர் லாரிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

**அ) நகர் சுகாதாரம்**

இந்நகரில் மொத்தம் 6421 கட்டிடங்கள் உள்ளன. அனைத்து வீடுகளில் கழிப்பிட வசதி உள்ளன. குறைந்த செலவில் கழிப்பிடம் கட்டும் திட்டத்தின்கீழ் 80 வீடுகளுக்கு கழிப்பிடம் கட்டி கொடுக்கப்பட்டுள்ளது. இந்நகராட்சிக்கு என உரக்கிடங்கு இல்லாத காரணத்தால் நகரில் சேரும் குப்பைகளை நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் கொட்டப்பட்டு வருகிறது.

**ஆ) உணவு கலப்பட தடுப்புச் சட்டம்**

அறிக்கையாண்டில் திரு.முருகேசன், துப்புரவு ஆய்வாளர் அவர்களால் உணவு கலப்படத் தடுப்பு சட்டத்தின்கீழ் உணவு மாதிரிகள் எடுக்கப்பட்டது.

**இ) அபாயகரமானதும் அருவருக்கத்தக்கதுமான உரிமத்தின்கீழ் பெறப்பட்ட வருமானம் –**

.

D&O - ரூ. 48,171/– PFA - ரூ.2,595/–

**ஈ).** நகராட்சிப் பகுதியில் அரசினால் பிரகடனப்படுத்தப்பட்ட உள்ளாட்சி தினவிழா, அறிஞர் அண்ணா பிறந்த தினவிழா, தமிழர் திருநாள் ஆகிய விழாக்கள் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது.

.

**30) பாதுகாக்கப்பட்ட குடிநீர் வினியோகம்**

இந்நகராட்சிப் பகுதியில் வெள்ளிப்பிள்ளையார் கோவில் தெரு பகுதியில் அமைந்துள்ள 17ஆழ்குழாய் கிணறுகளிலிருந்து கீழ்கண்ட இடங்களில் அமைந்துள்ள மேல்நிலைத் தொட்டிகளுக்கு மின்சார மோட்டார் மூலம் தண்ணீர் ஏற்றப்பட்டு கிருமி நாசினி கலந்து நகரில் எல்லா பகுதிகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வினியோகம் செய்யப்பட்டு வருகின்றது. 17 ஆழ்குழாய் கிணறுகளில் 16 ஆழ்குழாய் கிணறுகளில் 10 H,P. மோட்டார்களும், 1 ஆழ்துளைக் கிணறில் 5 H,P. மோட்டாரும் பொருத்தப்பட்டுள்ளன.

**மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் விவரம்**

| வ.எண். | அமைந்துள்ள இடம் | கொள்ளளவு |
|---|---|---|
| 1 | பேருந்து நிலையம் | 2 லட்சம் |
| 2 | துறைமுகத்தெரு | 1 லட்சம் |
| 3 | பொட்டல் பகுதி | 2 லட்சம் |
| 4 | நகராட்சி அலுவலகம் | 7 லட்சம் |
| 5 | துறைமுகத்தெரு | 1 லட்சம் |
| 6 | பர்னட்டிவிளை | 0.60 லட்சம் |
| 7 | கொட்டில்பாடு | 0.30 லட்சம் |
| 8 | கே.எஸ்.எஸ்.எஸ்.காலனி | 0.60 லட்சம் |
| 9 | சிங்காரவேலன் காலனி | 0.30 லட்சம் |
| 10 | மாதாகாலனி | 3.00 லட்சம் |
| 11 | KSSS காலனி – 2 | 3.00 லட்சம் |

இந்நகராட்சியில் 145 பொதுக்குழாய்கள் உள்ளன. 3845 தனியார் வீட்டு குடிநீர் குழாய்கள் நகராட்சி மூலம் வழங்கப்பட்டு பாதுகாக்கப்பட்ட குடிநீர் தினந்தோறும் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

**குடிநீர் கட்டணம்**

அறிக்கை ஆண்டில் குடிநீர் கணக்கு தலைப்பின்கீழ் வரவு ரூ. 53.70 லட்சம், செலவு ரூ.50.76 லட்சம்.

**31) கழிவுநீர் வடிகால்**

இந்நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் எதுவும் இல்லை. மழைநீர் வடிகால் மூலம் கழிவுநீர் நகரின் மேற்கே பாம்பூரி வாய்க்காலில் கடலில் சேருமிடத்தில் கலக்கிறது. நகரில் உள்ள மழைநீர் வடிகால் நீளம் 27.05 கி. மீ.

**32) பொது நலமும் பாதுகாப்பும்**

அறிக்கையாண்டில் நாய்கள், பன்றிகள் எதுவும் அழிக்கப்படவில்லை,

**33) பொது** – இல்லை

**34) போக்குவரத்து** – இல்லை

(அ) தினசரிச் சந்தை, மீன் சந்தை, வதை சாலை, பேரூந்து நிலையம் மற்றும் கட்டண கழிப்பிடம் போன்றவைகள் மூலம் கிடைத்த வருமான விவரம் பின்வருமாறு

| தினசரிச்சந்தை | மீன்சந்தை | வதைசாலை | பேரூந்து நிலைய கட்டணம் | கட்டண கழிப்பிடம் |
|---|---|---|---|---|
| 5,51,903/– | 93,823/– | – | 1,70,458/. | 72,794/– |

(ஆ) தினசரிச் சந்தை ஒன்றும், மீன்சந்தை ஒன்றும், பேருந்து நிலையம் 1 –ம் கட்டணக் கழிப்பிடம் 1–ம் பேணப்பட்டு பொது ஏலத்தில் குத்தகைக்கு விடப்பட்டு வருகின்றன.

(இ) வண்டிப்பேட்டை – இல்லை

**(எ) பேரூந்து நிலையம்**

சி – பிரிவு பேருந்து நிலையம் ஒன்று பராமரிக்கப்பட்டு வருகின்றது. பேருந்து நிலையம் மூலம் அறிக்கையாண்டில் நகராட்சிக்கு ரூ. 1,70,458/– வருமானம் கிடைத்துள்ளது.

**(உ) வதை சாலை**

நகராட்சிக்கு சொந்தமான வதை சாலை – இல்லை.

**(ஊ) தொழில் கூடங்கள்**

G.O.Ms.No.192 HSUD Dept. நாள் 14.02.1991 –ன்படி உள்ள மாஸ்டர் பிளான் அமுலில் உள்ளது. 1939–ம் வருட தமிழ்நாடு பொது சுகாதாரச் சட்டம் 01.07.1966 முதல் இந்நகராட்சியில் அமுலில் உள்ளது.

**36) மரம் நடுதல் மற்றும் பூங்கா பராமரிப்பு**

அறிக்கையாண்டில் மரங்கள் எதுவும் நடப்படவில்லை.
நகராட்சிக்கு சொந்தமான பூங்கா எதுவுமில்லை.

**37) நில வளர்ச்சி**

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், திருநெல்வேலி அவர்களால் பரிந்துரைக்கப்பட்ட விரிவு

அபிவிருத்தித்திட்டம்–I, II மற்றும் III ஆகியவை விளம்பரப்படுத்தப்பட உள்ளது.

**(ஆ) நகரமைப்பு திட்டங்கள்**

நகரமைப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

**(இ) சாலை ஓரக்கடைகள்** – இல்லை

**(ஈ) வரை கடப்புகள்** – அறிக்கையாண்டின் தொடக்கத்தில் 26 வரை கடப்புகள் காணப்பட்டன.

**(உ) இதர வருவாய் வரத்தக்க இனஙகள்** – இதர இனங்கள் எதுவுமில்லை.

## பொது வருமானம்

### 39) வருவாய் இனம்

இந்நகராட்சியில் கீழ்கண்டவாறு சொத்துவரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது,

| விவரம் | வரி |
|---|---|
| 1) பொது வரியினங்கள் | 8% |
| 2) விளக்கு வரி | 8% |
| 3) தண்ணீர் வரி | 8% |

**சொத்துவரி**

| | | | | |
|---|---|---|---|---|
| **மண்டலம்** | A | முக்கிய சாலைகள் | – | 2.05 பைசா |
| | B | பிரதானசந்திப்பு சாலைகள் | – | 1.05 பைசா |
| | C | குடியிருப்பு பகுதிகள் | – | 0.75 பைசா |
| | D | குடிசைப்பகுதி | – | 0.50 பைசா |

### 40) கட்டிடங்களுக்கு வரிவிதிப்பு

அறிக்கையாண்டில் 278 கட்டிடங்களுக்கு புதிய வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. புதிய வரிவிதிப்புகள் மூலம் நகராட்சி வருமானம் ரூ. 4,00,522/–

### 41) கேட்பு வசூல் நிலுவை

அறிக்கையாண்டில் வரியினம் மற்றும் வரியற்ற இனத்தின்கீழ் கேட்பு வசூல் நிலுவை விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| **இனம்** | **கேட்பு 2011–12** | **வசூல்** | **நிலுவை** (ரூ.இலட்சத்தில்) | **வசூல் விழுக்காடு** |
|---|---|---|---|---|
| சொத்துவரி | 98.25 | 56.36 | 41.89 | 77 % |
| தொழில்வரி | 10.28 | 6.09 | 4.19 | 59% |
| தண்ணீர் கட்டணம் | 33.82 | 27.25 | 6.57 | 81% |
| வரியற்றயினம் | 26.57 | 10.60 | 10.19 | 65% |

நூலகவரி சொத்துவரியில் 10 % என்ற கணக்கில் வசூலிக்கப்பட்டு வருகின்றது. தொழில் வரி புதிய அரசாணைப்படியும், இந்நகர்மன்ற தீர்மானம் எண்.651 நாள் 23.08.2008–ன்படியும் கீழ்க்கண்ட விபரப்படி தொழில்வரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| ரூ. 21,000/– வரை | இல்லை |
| ரூ. 21,001 முதல் ரூ. 30,000 வரை | ரூ. 94/– |
| ரூ.31,001 முதல் ரூ. 45,000 வரை | ரூ. 235/– |
| ரூ.45,001 முதல் ரூ. 60,000 வரை | ரூ. 469/– |
| ரூ.60,001 முதல் ரூ. 75,000 வரை | ரூ. 704/– |
| ரூ.75,001 முதல் அதற்கு மேல் | ரூ. 938/– |

**<u>42) பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம் (SJSRY)</u>**

இந்நகராட்சியில் பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம் 01.10.1998 முதல் நடைமுறையில் இருந்து வருகிறது. இதற்கான நிதி ஆதாரம் மத்திய அரசினரால் 75 சதவீதமும், மாநில அரசினரால் 25 சதவீதமும் வழங்கப்பட்டு வருகிறது.

2011–12–ம் ஆண்டிற்கான ஒதுக்கப்பட்ட தொகை மற்றும் பயன்பெற்றவர்கள் விபரம்:

2011–12 – இத்திட்டத்தின்கீழ் பல்வேறு அலகுகளுக்காக ஒதுக்கப்பட்ட மொத்த தொகை ரூ.11,21,342/–

**<u>நகர்ப்புற சுய வேலைவாய்ப்புத் திட்டம் (USEP – Subsidy)</u>**

தனிநபர் மானியக் கடன்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ.1,64,512/– தனிபர்கள் 24 பயனாளிகள். இம்மானியத் தொகையுடன் கூடிய கடன் தொகையினை நிதி வரப்பெற்ற பின் குளச்சலிலுள்ள வங்கிகளின் மூலமாக பயனளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**<u>நகர்ப்புற பெண்கள் சுய உதவித் திட்டம் (UWSP – Subsidy) :</u>**

ஒதுக்கப்பட்ட மானியத் தொகை ரூ.1,23,385/– இதனை பெண்கள் சய உதவிக் குழுக்களுக்கு நிதி வரப்பெற்ற பின் வங்கியின்மூலமாக வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

**<u>நகர்ப்புற பெண்கள் சுய உதவித் திட்டம் (UWSP - RF) :</u>**

ஒதுக்கப்பட்ட தொகை ரூ.41,128/– இதனை இந்நகராட்சியின்கீழ் இயங்கிவரும் குழுக்களுக்கு நிதி வரப்பெற்ற பின் சுழல் நிதியாக வழங்கப்பட்டு உள்ளது

**<u>நகப்புற ஏழைகளுக்கான வேலைவாய்ப்பு அதிகரிக்கும் திறன் வளர்க்கும் பயிற்சி (Step up) :</u>**

ஒதுக்கப்பட்ட தொகை ரூ.3,89,476/– இந்நிதியினை இந்நகராட்சிக்குட்பட்ட வறுமைக் கோட்டிற்கு கீழ்வாழும் பயனாளிகள் 84 நபர்களுக்கு பயிற்சி அளிக்க, சி.எஸ்.சி கம்யூட்டர் எஜுகேசன் (பி) லிமிடெட் மற்றும் CSI நிறுவனத்திற்குட்பட்ட யூனிக் நிறுவனத்தினரால் அளிக்கப்பட்டடு வருகிறது நிதி வரப்பெற்ற பின் பயிற்சித் தொகை வழங்கப்படும்

**<u>நகர்ப்புற கூலி வேலை வாய்ப்புத் திட்டம் (UWEP) :</u>**

ஒதுக்கப்பட்ட நிதி தொகையான ரூ. 2,36,648/– இதனை இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 21–ல், மழை நீர் வடிகால் ஓடையுடன் கூடிய சிமெண்ட் தளம் அமைக்கப்பட்டு வருகிறது.

**<u>நகர்ப்புற சமுதாய முன்னேற்ற கட்டமைப்பு (UCDN)</u>** :

ஒதுக்கப்பட்ட தொகையான ரூ. 82,257/– இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியிலுள்ள குழுக்களுக்கு பல்வேறு திறன் பயிற்சி வழங்கப்பட்டு உள்ளது.

**<u>அலுவலக மற்றும் இதர செலவினங்கள் (A&OE)</u>** :

ஒதுக்கப்பட்ட தொகை ரூ.52,461/– அலுவலக உபயோகத்திற்கு மற்றும் வளர்ச்சிப் பணிக்கு செலவழிக்கப்பட்டு உள்ளது.

**<u>தகவல், கல்வி மற்றும் தொடர்பு (I.E.C.)</u>** :

ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 31,475/– தகவல் மற்றும் தொடர்பு போன்ற செலவினங்களுக்கு செலவழிக்கப்பட்டு உள்ளது.

.

**42) <u>பொது</u>**

இந்நகராட்சியின் பொது நிதி உட்பட பல்வேறு தலைப்புகளின்கீழ் நடைபெற்ற பணிகள் விவரம்

**2010–2011–ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணிகள்**

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூபாய்) |
|---|---|---|
| I | **சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு திட்டம்** | |
| 1 | கே.எஸ்.எஸ்.எஸ்.காலனியில் குடிநீர், கழிவறை வசதியுடன் கூடிய குழந்தைகள் அங்கன்வாடி மையம் கட்டுதல். | 2,50,000/– |
| II | **சிறப்பு சாலை திட்டம் 2010–11** | |
| 1 | சிறப்பு சாலை திட்டத்தின்கீழ் இந்த ஆண்டு சிப்பம் எண்.1–க்கு தொகை ரூ.5279046/– வழங்கப்பட்டுள்ளது.<br>சிப்பம் எண்.2–க்கு தொகை ரூ. 3531502/– வழங்கப்பட்டுள்ளது. | 52,79,046/–<br>35,31,502/– |
| III | **சொர்ண ஜெயந்தி திட்டம் 2011–12** | |
| 1 | ஆசான்தெருவில் வடிகால் ஓடையுடன் கூடிய சிமெண்ட் தளம் அமைத்தல். | 2,15,000/– |

| | | |
|---|---|---|
| IV | **பொது நிதி** | |
| 1 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட மாதாகாலனி அருகில் செயின்ட் மேரீஸ் தொடக்கப்பள்ளி வடக்கு பகுதியில் மழைநீர் வடிகால் ஓடையுடன் கூடிய சிமெண்ட் சாலை அமைத்தல். | 50,000/- |
| 2 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட அண்ணாசிலை அருகில் கலையரங்கத்தில் சட்டர் அமைத்தல். | 90,000/- |
| 3 | குளச்சல் நகராட்சி அலுவலகத்தில் தண்ணீர் சுத்திகரிக்கும் கருவி பொருத்துதல். | 10,000/- |
| 4 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட கல்லத்திவிளையில் மழைநீர் வடிகால் ஓடையுடன் கூடிய சிமெண்ட் தளம் அமைத்தல். | 1,97,000/- |
| 5 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட காமராஜர் சாலையில் மழைநீர் வடிகால் ஓடை அமைத்தல். | 5,25,675/- |
| 6 | குளச்சல் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் பேருந்து நிறுத்துமிடம், பேவர் பிளாக் பிளாட்பாம், கழிவுநீர் வடிகால் ஓடைக்கு மேல்மூடி அமைத்தல் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்தல். | 6,77,889/- |
| 7 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட தைநாத்தன்கரையில் சிமெண்ட் சாலை அமைத்தல். | 2,60,043/- |
| 8 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வான்மலர் காலனி மற்றும் தோழமை காலனி பகுதிகளில் கழிவுநீர் ஓடை மற்றும் சிமெண்ட் சாலை அமைத்தல். | 2,57,627/- |
| 9 | குளச்சல் நகராட்சி அலுவலகத்தில் தீ தடுப்பு கருவிகள் பொருத்துதல். | 10,700/- |
| 10 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட அழகனார்கோட்டை விளையில் கழிவுநீர் ஓடையுடன் கூடிய சிமெண்ட் சாலை அமைத்தல். | 7,30,374/- |
| 11 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட மரமடி பகுதியில் பொது கழிப்பிடம் எண்.10, 11 பராமரிப்பு பணிகள் செய்தல். | 49,246/- |
| 12 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2, 3 மற்றும் 4 பகுதிகளில் ஒப்பந்த அடிப்படையில் துப்புரவு பணிகள் மேற்கொள்ளுதல். | 2,35,200/- |
| 13 | குளச்சல் அரசு மருத்துவமனை அருகில் பைப்லைன் உடைவு சரி செய்தல். | 5,409/- |
| 14 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பர்னட்டிவிளை ஜெபவீடு, பர்னட்டிவிளை F1/45, ஆசாரிமார் தெரு ஆகியவற்றில் குடிநீர் குழாய் உடைவு சரி செய்தல், | 9,349/- |
| 15 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட கள்ளியடைப்பு பகுதியில் 4” சப்ளை லைனில் ஏற்பட்ட பழுதுகளை சரி செய்தல். | 1,883/- |
| 16 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட செட்டிவிளையில் சுவிஸ் வால்வு சரி செய்தல். | 10,040/- |
| 17 | குளச்சல் நகராட்சி பகுதியில் அரசு நடுநிலைப்பள்ளி அருகில் 90mm பிவிசி பைப் சரி செய்தல். | 2,911/- |
| 18 | குழந்தை யேசு காலனியில் 63mm பிவிசி பைப் லைன் அமைத்தல். | 4,588/ |
| 19 | மார்க்கெட் ரோடு மற்றும் சிங்காரவேலன் காலனியில் பைப் லைன் சரி செய்தல். | 3,328/- |
| 20 | ஆழ்துளை கிணறு எண்.7, 9 மற்றும் 11 –ல் உள்ள நீர்மூழ்கி மோட்டார்கள் பழுதுகள் சரி செய்தல். | 13,261/- |

| | | |
|---|---|---|
| 21 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட எம்.ஜி.ஆர் காலனி மற்றும் தினசரிச்சந்தை பகுதிகளில் கழிவுநீர் ஓடைகளில் மூடி அமைத்தல். | 9,384/- |
| 22 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட விகேபி பள்ளிக்கூடம் காம்பவுண்ட் அருகில் உள்ள ஆழ்துளை கிணற்றில் நீர்மூழ்கி மோட்டாரில் பழுதுகள் சரி செய்தல். | 12,158/- |
| 23 | குளச்சல் நகராட்சியில் ஆழ்துளை கிணறுகளில் உள்ள பழுதுகள் சரி செய்தல். | 82,229/- |
| 24 | குளச்சல் நகராட்சி போர்வெல் எண்.2 மற்றும் 5–ல் புதிய 10 எச்.பி.சப்மெர்சிபுள் மோட்டார் பொருத்துதல். | 89,989/- |
| 25 | குடிநீர் – வால்வுகள், பைப்லைன் மற்றும் பம்புசெட் பழுது பணிகள் மேற்கொள்ளல். | 2,00,000/- |
| 26 | குடிநீர் சம்பந்தமான பழுதுகள் மற்றும் பராமரிப்பு பணிகள் 2011–2012 –ம் ஆண்டு மேற்கொள்ளல். | 2,99,995/- |
| 27 | பர்னட்டிவிளை, தும்பக்காட்டுவிளை மற்றும் புல்லன்விளையில் சுவிஸ் வால்வு மாற்றுதல் | 19,310/- |
| 28 | போர்வெல் எண்.3 மற்றும் பம்பிங் மெயின் லைனில் உள்ள பழுதுகள் சரி செய்தல். | 37,780/- |
| 29 | துறைமுகத்தெருவில் 110 mm பம்பிங் லைனில் பழுதுகள் சரி செய்தல். | 14,427/- |
| 30 | மாதாகாலனிக்கு செல்லும் 110 mm பம்பிங் லைனில் பழுதுகள் சரி செய்தல். | 28,758/- |
| 31 | குளச்சல் நகராட்சிக்கு சப்மெர்சிபுள் மோட்டாருடன் பேனல் போர்டு வாங்குதல் | 2,45,650/- |
| 32 | சுவிஸ் வால்வு மற்றும் ஏர் வால்வு பழுதுகள் சரி செய்தல் | 60,000/- |
| 33 | குடிநீர் சம்மந்தமான 5 எண்ணம் பம்பு செட் பழுதுநீக்கம் செய்து திரும்ப பொருத்துதல். | 24,381/- |
| 34 | கேஎஸ்.எஸ்.எஸ்.காலனி முதல் சிங்காரவேலன் காலனி வரை 63எம்எம்.HDPE பைப் லைன்அமைத்தல். | 51,465/- |
| 35 | மாதாகாலனி 110mm பைப் லைலுடன் மற்றும் பீச் 110 mm பைப் லைனை இணைத்தல். | 18,513/- |
| 36 | பீச் பம்பிங் மெயின் மற்றும் மாதாகாலனி பம்பிங் லைன் பழுது சரி செய்தல். | 23,000/- |
| 37 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட இந்திராகாலனி அருகிலுள்ள கம்போஸ்ட் அருகில் பிவிசி குழாய் அமைத்தல். (hydrants point) | 12,655/- |
| 38 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட மதனாவிளை, ஈழக்காணிவிளை முகைதீன்பள்ளி, பீச் ஜங்சன், காணிக்கை மாதா கோயில் அருகில், தும்பக்காடு, சி.எம்.சி.காலனி ஆகிய பகுதிகளில் சுவிஸ் வால்வு சரி செய்தல். | 57,000/- |
| 39 | துறைமுகத்தெருவில் கதவு எண்.11–46 முதல் 11–49 வரை 2’’ பிவிசி பைப் லைன் அமைத்தல். | 10,000/- |
| 40 | குளச்சல் நகராட்சியில் 63A மெயின் சுவிட்ச் மற்றும் மின்மாற்றி பொருத்துதல். | 10,000/- |

**44)** **<u>கடன்கள்</u>**

| | | |
|---|---|---|
| 45) அறிக்கையாண்டில் கடன் ஆரம்ப இருப்பு | – | ரூ. 2,16,96,298/– |
| அரசிடமிருந்து பெறப்பட்ட கடன் | – | – |
| திரும்ப செலுத்தப்பட்ட கடன் | – | ரூ. 4,80,316/– |
| செலுத்தப்பட்ட வட்டி | – | ரூ. 1,51,887/– |
| **இறுதி இருப்பு** | – | **ரூ. 2,10,64,095/–** |

**46.** **<u>முதலீடுகள்</u>**

நகராட்சி முதலீட்டு கணக்கில் இருப்பு ரூ. 6,30,704/–

**<u>தணிக்கை</u>**

தணிக்கை ஆண்டில் 1671 தணிக்கைத் தடைகள் இருந்தது. 50 தணிக்கைத் தடைகள் முடிவு செய்யப்பட்டது. அறிக்கை ஆண்டு முடிவில் 1621 தணிக்கைத் தடைகள் நிலுவையாக உள்ளன.

**46)** **<u>சொத்து</u>**

அறிக்கை ஆண்டில் நகராட்சியின் சொத்து மதிப்பு – ரூ.85,93,634/–

கடந்த ஆண்டுகளில் அரசிடமிருந்து கடன் ஏதும் பெறப்படவில்லை. ஏற்கனவே செலுத்தப்பட வேண்டிய கடன் தொகை மட்டும் வட்டி சேர்த்து செலுத்தப்பட வேண்டியுள்ளது.

<u>பொது குறிப்பு</u>

அறிக்கை ஆண்டில் இந்நகராட்சி நிர்வாகம் நல்லமுறையில் செயல்பட முழு ஒத்துழைப்பு நல்கிய அனைத்துப் பணியாளர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆணையர் (பொ)
குளச்சல் நகராட்சி

**தீர்மானம் எண்:241. <u>அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டு, பதிவு செய்யப்பட்டது.</u>**

**பொருள் எண்.2**

இந்நகராட்சிக்கு 2012–2013–ம் ஆண்டிற்கு தேவையான படிவங்கள், பதிவேடுகள் மற்றும் கணனி பிரிவிற்கு தேவையான எழுது பொருட்கள் வாங்க உத்தேச செலவுத் தொகை ரூ.5,00,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.எச்1/936/2010)

**தீர்மானம் எண்:242. <u>அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.</u>**

**பொருள் எண்.3**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10 துறைமுகத்தெருவில் இந்தியன் வங்கி முன்புறம் அமைந்துள்ள நூலக கட்டிடத்தில் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுவதற்கு ஏதுவாக மேற்படி கட்டிடத்தில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும், மேலும் அதன் அருகில் அமைந்துள்ள பொது கழிப்பிடத்தில் மிகவும் மோசமாக பழுதடைந்துள்ள கதவுகள், கழிவறை இருக்கைகள் மற்றும் தரை ஆகியவற்றை சரி செய்து நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு பயன்படுத்தவும் ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ. 1,80,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : 1) மேற்படி நூலக கட்டிடத்தில் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுவதற்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.186, நாள் 30.03.2012–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது.

2) பணியின் அவசியம் மற்றும் முக்கியத்துவம் கருதி பராமரிப்பு பணிகளுக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ. 1,80,000/– க்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/955/2012)

**தீர்மானம் எண்:243. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.4**

TAMILNADU URBAN INFRA STRUCTURE FINANCIAL SERVICES LIMITED (TNUIFSL), Chennai அலுவலக கடிதம் TNUIFSL/KfW/SWD/2012/02 நாள் 08.05.2012–ல் தெரிவிக்கப் பட்டுள்ளபடி, இந்நகராட்சிக்குட்பட்ட சிங்கன்காவு சாஸ்தா கோவில் முதல் களிமார் பாலம் வரை தற்போது அமைந்துள்ள வடிகால் ஓடையில் கழிவுநீர் தேங்கி நிற்பதால் மேற்படி இடத்தில் காங்கிரீட்டால் ஓடை அமைத்து சாலை அமைப்பதற்கு TNUIFSL நிறுவனத்தின் KfW Grant திட்டத்தின்கீழ் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்வதற்கும், தொடர் நடவடிக்கை மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/387/2012)

**தீர்மானம் எண்:244. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.5**

இந்நகராட்சியின் 2011–12–ம் ஆண்டு திட்ட ஒதுக்கீடு தொடர்பான விளம்பரத்தை மாலை மலர் நாளிதழின் தொழில் மலரில் வெளியிட்ட வகையில் ரூ.4,950/– ஐ செலுத்த கேட்டு பட்டியல் பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையினை சம்மந்தப்பட்ட அலுவலகத்திற்கு செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/2045/2012)

**தீர்மானம் எண்:245. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.6**

இந்நகராட்சியின் 2011–12–ம் ஆண்டு திட்ட ஒதுக்கீடு தொடர்பான விளம்பரத்தை தினத்தந்தி நாளிதழின் 18.05.2012–ம் தேதிய பதிப்பில் வெளியிட்ட வகையில் ரூ.8,400/– ஐ செலுத்த கேட்டு சம்மந்தப்பட்ட அலுவலகத்திலிருந்து பட்டியல் பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையினை வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/2045/2012)

**தீர்மானம் எண்:246. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.7**

இந்நகராட்சியில் தெருவிளக்கு பராமரிப்பு பணிகளுக்காக பயன்படுத்தப்பட்ட பழைய மின்சாதனங்களுக்கான மறுஏல அறிவிப்பினை 03.05.2012–ம் தேதிய தினத்தந்தி நாளிதழில் பிரசுரம் செய்த வகையில் ரூ.2,520/– ஐ செலுத்த கேட்டு பட்டியல் பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையினை சம்மந்தப்பட்ட அலுவலகத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/5044/2011)

**தீர்மானம் எண்:247. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.8**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு மினி லாறி எண். TN.74 Z-8931–ன் மின்கலம் பழுதடைந்துள்ளதால் பழைய மின்கலத்தை மாற்றி புதிய மின்கலம் அமைப்பதற்கு ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ. 8,500/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.எச்1/4739/2008)

**தீர்மானம் எண்:248. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.9**

இந்நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் வினியோக லாரி TN.74.Z -5304 –க்கு தகுதிச் சான்று புதுப்பிக்க வேண்டியுள்ளதால் மேற்படி வாகனத்தில் ஏற்பட்டுள்ள கீழ்காணும் பழுதுகளை சரி செய்வதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.23,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் விபரம்**

1) முழு பெயிண்டிங்
2) மைனர் பேட்ச் ஒர்க்
3) டீசல் டேங்க் பிராக்கட் செய்தல்
4) ரேடியேட்டர் டேங்க் (நைலான்) புதிதாக பொருத்துதல்
5) முழு சர்வீஸ் மற்றும் கிரீஸ் வைத்தல்
6) எலக்டரிக் செக்கப் செய்தல்
7) கியர் சரி செய்தல்
8) இரு பக்க சைடு கண்ணாடி பொருத்துதல் மற்றும் இதர பணிகள் செய்தல்.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/5754/2010)

**தீர்மானம் எண்:249. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.10**

இந்நகராட்சிக்குட்பட்ட காமராஜர் பேருந்து நிலையத்தில் தொலைக்காட்சி பெட்டி வைத்து விளம்பரம் செய்வதற்கு பேருந்து நிலைய மேல்நிலை நீர்தேக்க தொட்டி அருகில் அமைந்துள்ள அறைக்கு மின் இணைப்பு பெறுவதற்கு ரூ.5,000/– உத்தேச செலவினத்தில் ஒயரிங் பணியினை மேற்கொள்வதற்கு பணியின் அவசர அவசியம் கருதி 10.02.2012 –ல் இந்நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவரின் முன்அனுமதி பெற்று 13.02.2012 அன்று உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து நேரடியாக விலைப்புள்ளி பெறப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| 1. | M/s.Sunder Engineering Works, Pilankalai, Mulagumoodu. | ரூ. 4,853/–<br>(மதிப்பீட்டை விட 4.68% கூடுதல்) |
| 2. | M/s.Chandra Sekar Water Supply Contract Works, Thickanamcodu. | ரூ. 4,633/–<br>(மதிப்பீட்டை விட 0.06% குறைவு) |

மேற்படி விலைப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.06% குறைத்து விலைப்புள்ளி அளித்துள்ள M/s.Chandrasekar water supply contract works, Thickanamcode என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி 14.02.2012–ல் பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : 1) மன்றம் பதிவு செய்யலாம்.

2) பணியின் அவசர அவசியம் கருதி மதிப்பீட்டுத் தொகை ரூ.5,000/–க்கு இந்நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன்அ.னுமதி பெற்று உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து நேரடியாக விலைப்புள்ளி பெற்று பணி மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.அ2/6536/2010)

**தீர்மானம் எண்:250. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு பதிவுசெய்யப்பட்டது. ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.11**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள கீழ்காணும் அங்கன்வாடி மையங்களில் சுவர்கள், தரைகள், கதவுகள், கழிப்பிட இருக்கைகள் ஆகியவை மிக மோசமாக பழுதடைந்துள்ளது.

12) சாஸ்தாங்கரை மையம் எண். 79
13) செக்காலத்தெரு மையம் எண். 80
14) கொட்டில்பாடு–1 மையம் எண். 83
15) கொட்டில்பாடு–2 மையம் எண். 88
16) மரமடி–1 மையம் எண். 84
17) மரமடி–2 மையம் எண். 87
18) துறைமுகத்தெரு–1 மையம் எண். 86
19) துறைமுகத்தெரு–2 மையம் எண். 89
20) அஞ்சாலிவிளை மையம் எண். 81

மேற்படி அங்கன்வாடி மைய பணியாளர்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் வேண்டுகோளின் படியும், குழந்தைகளின் நலன் கருதியும், மேற்படி அங்கன்வாடி மையங்களில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கான உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.9,00,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : பணியின் அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/4029/2011)

**தீர்மானம் எண்:251. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.12**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் போக்குவரத்து மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பணிகள் மேற்கொள்ள ஒதுக்கீட்டுத் தொகை ரூ.25.00 இலட்சத்திலிருந்து ரூ.50.00 இலட்சமாக உயர்த்தி அரசாணை வெளியிடப்பட்டதன் அடிப்படையில் மேற்படி திட்டத்தின் பணிகள்

மேற்கொள்வதற்கு கருத்துருக்கள் அனுப்பி வைக்க நகராட்சி நிர்வாக மண்ட இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் கடிதம் ந.க.எண்.870/2012/ஆ1 நாள் 27.04.2012–ல் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி, இந்நகராட்சியில் மேற்படி திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட உள்ள பணிகள் தொடர்பான விபரம் பின்வருமாறு :

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட பீச் சந்திப்பு முதல் காந்தி சந்திப்பு வரையில் கிழக்கு பகுதியில் ஏற்கனவே உள்ள மழைநீர் வடிகால் ஓடையின் மேல் நடைபாதைக்குரிய Tiles மற்றும் கைப்பிடி அமைத்தல் மற்றும் குளச்சல் பிரதான சாலையில் காந்தி சந்திப்பு முதல் நகராட்சி அலுவலகம் முன்பு வரை தெற்கு பகுதியில் மழைநீர் வடிகால் ஓடை மற்றும் கைப்பிடியுடன் கூடிய நடைபாதை அமைத்தல். | ரூ. 35.00 இலட்சம் |
| 2 | இந்நகராட்சிக்குட்பட்ட பீச் சந்திப்பு முதல் காந்தி சந்திப்பு வரையில் மேற்கு பகுதியில் ஏற்கனவே உள்ள மழைநீர் வடிகால் ஓடையின் மேற்கு பகுதியில் ஏற்கனவே உள்ள மழைநீர் வடிகால் ஓடையின் மேல் நடைபாதைக்குரிய Tiles மற்றும் கைப்பிடி அமைத்தல் மற்றும் காந்தி சந்திப்பு முதல் நகராட்சி அலுவலகம் வரை வடக்கு பகுதியில் மழைநீர் வடிகால் ஓடை, Tiles மற்றும் கைப்பிடியுடன் கூடிய நடைபாதை அமைத்தல். | ரூ.33.00 இலட்சம் |
| | மொத்தம் | ரூ.68.00 இலட்சம் |

மேற்படி பணிகளுக்கு மதிப்பீட்டு தொகை ரூ.68.00 இலட்சத்தில் மேற்கொள்ளவும், போக்குவரத்து மேம்பாட்டுத்திட்ட ஒதுக்கீட்டு தொகை ரூ.50.00 இலட்சம் போக மீதி தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும், மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/4586/2006)

**தீர்மானம் எண்:252. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.13**

இந்நகராட்சிக்குட்பட்ட கொம்பன்விளாகம், வெள்ளிப்பிள்ளையார் கோவில் பகுதியில் வசிக்கும் இரண்டு வீட்டுக்காரர்கள், ஆழ்குழாய் கிணறு தோண்டி ராட்சத மின்மோட்டார் மூலம் பல இலட்சம் குடிநீரை மாவட்டத்தின் பல பகுதிகளில் இருக்கும் தண்ணீர் பாட்டில் நிறுவனங்களுக்கு விற்று பல இலட்சம் சம்பாதிப்பதாகவும், இதனால் குளச்சல் நகராட்சிக்குட்பட்ட நான்கு பஞ்சாயத்துக்களுக்கு மிகப்பெரிய அளவில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படுவதுடன் குடிநீர் உப்புநீர் ஆவதற்கு வாய்ப்புகள் அதிகரிப்பதாகவும் பொதுமக்களிடமிருந்து புகார் வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி புகார் மீது மேல்நடவடிக்கை தொடர்வது குறித்து மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

(ந.க.எண்.இ1/2123/2012)

**தீர்மானம் எண்:253. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. சம்மந்தப்பட்ட துறைகளுக்கு தீர்மான நகல் அனுப்பப்பட்டு அவசர நடவடிக்கை எடுத்திட தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.14**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.5–ல் கதவு எண்.7/47–ல் உள்ள குடிநீர் குழாய் இணைப்பை தற்போது குடிநீர் தேவையில்லாத காரணத்தினால் தற்காலிகமாக துண்டிப்பு செய்ய கோரியுள்ளார். எனவே மனுதாரரின் வேண்டுகோளை ஏற்று கதவு எண்.7/47–ல் உள்ள குடிநீர் குழாய் இணைப்பை தற்காலிகமாக துண்டிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/1860/2012)

**தீர்மானம் எண்:254. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.15**

**நகர்மன்ற தலைவர் அவர்கள் கொண்டுவரும் தீர்மானம்**

(1) குளச்சல் நகராட்சியில் துறைமுக பாலத்திலிருந்து மீன் ஏலம் விடும் தளம் வரை புதிதாக அமைக்கவிருக்கும் சாலைக்கு தமிழக அமைச்சரவையில் அமைச்சராக பொறுப்பு வகித்த திருமதி.லூர்தம்மாள் சைமன் என்ற பெயரை சாலையின் பெயராக அமைத்திட மன்றம் தீர்மானிக்கலாம்.

(2) தைநாத்தன்கரையிலிருந்து ரீத்தாபுரம் தொடக்க எல்லை பாலம் வரை கொண்டு செல்லும் புதிய சாலைக்கு தமிழக முன்னாள் முதல்வர் பெருந்தலைவர் காமராஜரின் தாயார் அன்னை சிவகாமி அம்மாள் சாலை என்ற பெயரை அமைத்திட மன்றம் தீர்மானிக்கலாம்.

(3) பொட்டல் பாலத்தங்கரை சாலை என்ற பெயரில் உள்ள சாலையை புதிய தார் சாலையாக அமைக்கும் போது மனிதகுல மாணிக்கம் அன்னை தெரசா சாலை என்ற பெயரில் அமைத்திட மன்றம் தீர்மானிக்கலாம்.

(4) அண்ணாசிலையிலிருந்து தொடங்கும் நகராட்சி பகுதியிலுள்ள பள்ளிரோட்டை புதிய தார் சாலையாக அமைத்து காயிதே மில்லத் சாலை என்ற பெயரில் அமைத்திட மன்றம் தீர்மானிக்கலாம்.

(5) வெள்ளியாகுளம் முதல் சிங்கன்காவு வரையுள்ள சாலைக்கு சுதந்திர போராட்ட வீரர் இரும்பு மனிதர் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் சாலை என்ற பெயரை அமைத்திட மன்றம் தீர்மானிக்கலாம்.

(6) குளச்சல் நகராட்சியின் தினசரி மார்க்கெட் சாலையை பாலகங்காதர திலகர் சாலை என்ற பெயர் அமைத்திட மன்றம் தீர்மானிக்கலாம்.

(7) குளச்சல் நகராட்சிக்குட்பட்ட நரிக்கல் சிங்கன்காவு சாலையை ஜான்சிராணி லெஷ்மிபாய் சாலை என்ற பெயர் அமைத்திட மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண்:255. ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.16**

**1–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.என்.விஜயராணி அவர்கள் கொண்டுவரும் தீர்மானம்**

(1) குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் ஒன்றாவது வார்டில் சாஸ்தாங்கரை பேருந்து நிறுத்தம் அருகில் நாராயணசுவாமி கோயிலுக்கு செல்லும் சாலையை நாராயணநகர் சாலை என்று பெயர் பதிவு செய்ய மன்றம் தீர்மானிக்கலாம்.

(2) குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் ஒன்றாவது வார்டில் வடக்கு கள்ளியடப்பு புதுப்பித்த தார்சாலையை செந்தாரவிளை அம்மன்சாலை என பெயர் பதிவு செய்ய மன்றம் தீர்மானிக்கலாம்.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.tpi/2145/2012)

**தீர்மானம் எண்:256. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் 2012 மே திங்கள் 31.05.2012–ம் நாள் வியாழக்கிழமை காலை 11.30 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

முன்னிலை:
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்.

**பொருள் எண்.1**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் SFC Devolution (4-th SFC) உட்கட்டமைப்பு இடைநிரப்புதல் நிதி மற்றும் இயக்குதலும், பேணுதலும், இடைநிரப்புதல் நிதி 2012–13–ன்கீழ் பணிகள் மேற்கொள்வதற்கு, பணிகள் தேர்வு செய்து பிரேரணை சமர்ப்பிக்க நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.14950/2012/LA3 நாள் 19.04.2012–ல் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி, கீழ்கண்ட இடங்களில் மழைநீர் வடிகால் ஓடையுடன் கூடிய நடைபாதை அமைக்க ரூ.201 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு :

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட திக்கணங்கோடு செல்லும் சாலையில் கிழக்கு பக்கம் நடைபாதையுடன் கூடிய மழைநீர் வடிகால் ஓடை அமைத்தல். | ரூ. 60.00 இலட்சம் |
| 2 | இந்நகராட்சிக்குட்பட்ட திக்கணங்கோடு செல்லும் சாலையில் மேற்கு பக்கம் நடைபாதையுடன் கூடிய மழைநீர் வடிகால் ஓடை அமைத்தல். | ரூ.60.00 இலட்சம் |
| 3 | இந்நகராட்சிக்குட்பட்ட களிமார் செல்லும் சாலையின் இரண்டு பக்கமும் நடைபாதையுடன் கூடிய மழைநீர் வடிகால் ஓடை அமைத்தல். | ரூ.33.00 இலட்சம் |
| 4 | இந்நகராட்சி அலுவலகம் முதல் திக்கணங்கோடு செல்லும் சாலை வரை இருபுறமும் நடைபாதையுடன் கூடிய மழைநீர் வடிகால் ஓடை அமைத்தல். | ரூ.48.00 இலட்சம் |
| | **மொத்தம்** | **ரூ.201.00 இலட்சம்** |

எனவே மேற்காணும் பணிகளை **ரூ.201** இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கும், அதற்கான பிரேரணையை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்புவதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/1639/2012)

**தீர்மானம் எண்:257. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.2**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட அலுவலக மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அவுட்டரில் இருந்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வரும் சிங்காரவேலன் காலனி, அந்தோணியார் காலனி, தோழமை காலனி ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யும் போது மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியில் அதிக அளவு தண்ணீர் இல்லாமல் இருந்தால் குடிநீர் விநியோகம் சீராக இருப்பது இல்லை. மேலும் கொட்டில்பாடு பகுதிகளுக்கும் சீரான குடிநீர் விநியோகம் தற்போது இல்லை. எனவே KSSSகாலனியில் உள்ள 3,00,000 லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியிலிருந்து குடிநீர் வழங்கும் பொருட்டு 3'' PVC பகிர்மான குழாய் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. 1,20,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/2034/2012)

**தீர்மானம் எண்:258. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.3**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வி.கே.பி. மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியிலிருந்து பொட்டல், சி.எம்.சி.காலனி, பாலத்தன்கரை, சீம்பிளிவிளை ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் 2'' PVC பகிர்மான குழாயின் மூலம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது குடிநீர் குழாய் இணைப்புகள் அதிகரித்து கொண்டு வருவதால் குடிநீர் விநியோகம் பொட்டல், பாலத்தன்கரை, சீம்பிளிவிளை ஆகிய பகுதிகளில் சீராக இல்லை. மேலும் மேற்கண்ட பகுதிகளிலிருந்து பொதுமக்களிடம் இருந்து வந்த புகாரின் அடிப்படையில் மேற்கண்ட பகுதியில் தற்போது அமைக்கப்பட்டு இருக்கும் 2'' PVC பகிர்மான குழாயை மாற்றிவிட்டு 3'' PVC பகிர்மான குழாய் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. 2,40,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/2037/2012)

**தீர்மானம் எண்:259. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.4**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு ஆழ்துளை கிணறுகளிலிருந்து மின்மோட்டார்கள் மூலம் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளில் ஏற்றப்பட்டு வால்வுகளின் மூலம் குடிநீர் விநியோகம் தினந்தோறும் செய்யப்பட்டு வருகிறது. ஆனால் தற்போது கோடைகாலம் ஆனதால் ஆழ்துளை கிணறுகளில் நீர் ஆதாரம் குறைவாக உள்ளது. மேலும் தற்பொழுது உள்ள 21 ஆழ்துளை கிணறுகளில் 3 ஆழ்துளை கிணறுகளில் மோட்டார் தூக்க முடியாமல் உபயோகமற்று உள்ளது. மேலும் தற்போது உபயோகத்தில் உள்ள 19 ஆழ்துளை கிணறுகளில் பெரும்பாலான ஆழ்துளை கிணறுகளில் உள்ள நீர் சற்று சுவை குறைந்ததாக உள்ளது. எனவே குடிநீரின் அவசியம் கருதி வெள்ளிப்பிள்ளையார் கோவில் சம்ப் அருகிலும், KSSSகாலனி மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அருகிலும், பண்டாரவிளை சப் ரெஜிஸ்டர் அலுவலகம் அருகிலும் புதியதாக 3 ஆழ்துளை கிணறுகள் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. 5,00,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/2036/2012)

**தீர்மானம் எண்:260. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.5**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட செட்டிவிளை, செட்டியத்தெரு ஆகிய பகுதிகளுக்கு தற்போது வி.கே.பி மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியிலிருந்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு

வருகிறது. தற்போது குடிநீர் குழாய் இணைப்புகள் அதிகரித்து கொண்டு வருவதால் மேற்கண்ட பகுதியில் குடிநீர் விநியோகம் சீராக இல்லை. எனவே செட்டிவிளை பகுதிக்கு அலுவலக மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியிலிருந்து குடிநீர் விநியோகம் செய்வதற்கு புளியமூட்டு விளையிலிருந்து செட்டிவிளை வரை 3'' PVC பகிர்மான குழாய் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. 50,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.இ2/2038/2012)

**தீர்மானம் எண்:261. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.6**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட அலுவலக மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியிலிருந்து மார்க்கெட் பின்புறம், பள்ளிவிளாகம், கணியாக்குடி, நரிக்கல் ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மார்க்கெட் பின்புறத்திலிருந்து கணியாக்குடி வரை 3'' PVC பகிர்மான குழாய் மூலம் குடிநீர் விநியோகம் நடைபெற்று வருகிறது. கணியாக்குடியிலிருந்து கீழ்பகுதியான நரிக்கல் பகுதிக்கு தண்ணீர் விநியோகம் செய்யும் போது மேல் பகுதிகளுக்கு தண்ணீர் எப்பொழுதும் வந்து கொண்டிருக்கிறது. இதனால் குடிநீர் அதிகளவு வீணாகிறது. எனவே மார்க்கெட் பின்புறத்திலிருந்து புதியதாக கணியாக்குடி திருப்பு வரை 3'' PVC பகிர்மான குழாய் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. 1,10,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/2259/2012)

**தீர்மானம் எண்:262. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.7**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பொட்டலில் உள்ள வி.கே.பி. மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியிலிருந்து காலை 4.30 மணியிலிருந்து குடிநீர் விநியோகம் கள்ளியடைப்பு, பர்னட்டிவிளை, மதனாவிளை, பண்டாரவிளை, செட்டியதெரு, சி.எம்.சி.காலனி, சீம்பிளிவிளை ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. நீர்த்தேக்க தொட்டியில் குடிநீர் விநியோகம் தொடங்கி முடியும் வரை குடிநீர் குழாய் இணைப்புகளில் தண்ணீர் வந்து கொண்டே இருக்கிறது. இதேபோல் செட்டியதெரு, குளச்சல்கடை தெரு, பழைய ராபின் ஆஸ்பத்திரி தெரு ஆகிய பகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்யும் போது மெயின் ரோட்டில் குடிநீர் இணைப்புகளில் தண்ணீர் வந்து கொண்டே இருக்கிறது. மேலும் மெயின் ரோட்டில் உள்ள வணிக பயன்பாட்டில் உள்ள குடிநீர் இணைப்புகள் அனைத்தும் தேவைக்கு குடிநீரை பிடித்து நல்லியை அடைக்காமல் குடிநீர் வீணாகிறது. மேற்குறிப்பிட்ட காரணங்களால் செட்டியதெரு, குளச்சல்கடை தெரு, ராபின் ஆஸ்பத்திரி தெரு ஆகிய பகுதிகளுக்கு குடிசீர் சீராக விநியோகம் செய்ய முடியாத சூழ்நிலை உருவாகிறது. எனவே வி.கே.பி. மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியிலிருந்து பள்ளிரோட்டில் பாலையா மார்பிள் கடை வரை புதிதாக 4'' PVC பகிர்மான குழாய் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. 3,70,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/2035/2012)

**தீர்மானம் எண்:263. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.8**

இந்நகராட்சியில் தெருவிளக்கு பராமரிப்பதற்கு பயன்படுத்திய பழைய மின்சாதனங்களுக்கு கடந்த 21.02.2012–ல் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் அதிகபட்ச ஏலக்கேள்வியாக ரூ.71,000/–க்கு ஏலம் கேட்ட திரு.எ.ஷாஜஹான், குளச்சல் என்பவர்

ஏலத்தொகையினை செலுத்தி பொருட்களை அப்புறப்படுத்தாத காரணத்தால் பலமுறை அறிவிப்புகள் வழங்கப்பட்டது. ஆனால் மேற்படி நபரிடமிருந்து எவ்வித தகவலும் கிடைக்கப்பெறாத காரணத்தால் அன்னாரது ஏலம் ரத்து செய்யப்பட்டு 23.05.2012–ல் மறுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 21 நபர்கள் வைப்புத் தொகை செலுத்தி ஏலத்தில் கலந்து கொண்டனர். அதில் அதிகபட்ச தொகையாக ரூ.55,555/– க்கு திரு.எ.பஷீர், குளச்சல் என்பவர் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். எனவே மேற்படி விவரம் மன்றத்தின் பார்வைக்கும், பழைய பொருட்களை அப்புறப்படுத்துவதற்கு, திரு.எ.பஷீர், குளச்சல் என்பவருக்கு உத்தரவு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதியும் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/5044/2011)

**தீர்மானம் எண்:264. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.9**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வீடுகளுக்கு வீடுவீடாக சென்று யானைக்கால் நோய் தடுப்பு மாத்திரைகள் வழங்கும் பணிக்காக ஜேம்ஸ் மருத்துவமனை செவிலியர்கள், சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் மற்றும் நகராட்சி பணியாளர்கள் ஆகியோருக்கு 27.04.2012 அன்று துணை இயக்குனர், சுகாதாரப் பணிகள், நாகர்கோவில் அவர்களால் நடத்தப்பட்ட பயிற்சி வகுப்பு மற்றும் 02.05.2012 அன்று நகர்மன்ற தலைவர் அவர்களின் தலைமையில் நடத்தப்பட்ட கூட்டத்திற்கும், சேர் வாடகைக்கு எடுத்தது, டீ, பிஸ்கெட் வாங்கியது மற்றும் புகைப்படம், C.D. தயார் செய்த வகையில் ரூ. 1,780/– துப்புரவுப்பணி மேற்பார்வையாளர் திரு.பி.மணி அவர்களால் செலவிடப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை அன்னாருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.எச்1/618/2010)

**தீர்மானம் எண்:265. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.10**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சொத்துவரி மற்றும் குடிநீர் வரி நிலுவை அதிகம் இருந்த காரணத்தினால் குடிநீர் குழாய் இணைப்பு துண்டிக்கும் பணி 09.03.2012 முதல் 27.03.2012 வரை நடைபெற்றது. கீழ்கண்ட முகவரியில் உள்ளவர்களின் சொத்துவரி, குடிநீர் வரி அதிகம் நிலுவை இருந்த காரணத்தினால் குடிநீர் குழாய் இணைப்பு துண்டிப்பு செய்யப்பட்டு D.C.பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | திருமதி.சேதுகுமாரி அம்மா | க.எண்.1/99.பி |
| 2 | திருமதி. செல்வி | க.எண்.29/72சி |
| 3 | திரு. கோலப்பன் ஆசாரி | க.எண்.29/85சி |
| 4 | திரு.ஜாண்சன் டேவிட் | க.எண்.29/136 |
| 5 | திரு.ஹென்றி | க.எண்.27/1பி |
| 6 | திருமதி. மரியகுளோறி | க.எண்.16/347–9 |
| 7 | திரு. ஜார்ஜ் | க.எண்.24/56 |
| 8 | திரு.சுப்ரமணியன் | க.எண்.5/96 |
| 9 | திரு.மம்மூது | க.எண். 3/90கே |
| 10 | திரு.லூர்தையா | க.எண்.14/19 |
| 11 | திரு.அந்தோணி குருசு | க.எண்.4/572 |

**அ.குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம்

(ந.க.எண்.அ1/2042/2007)

**தீர்மானம் எண்:266. பதிவு செய்யப்பட்டது. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.11**

நகராட்சி நிர்வாக இணை இயக்குநர் மற்றும் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகியோரின் நேரடி அறிவுரைகளின்படி, இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு காய்ச்சல் வேகமாக பரவாமல் பொதுமக்களை காக்கும் பொருட்டு கொசுப்புழு உற்பத்தியை தடுப்பதற்கு, நகராட்சி பகுதிகளில் காணப்படும் நீர்நிலைகளில் வளர்ந்துள்ள செடி கொடிகள், புதர்கள் ஆகியவற்றை அகற்றிடவும், கழிவுநீர் ஓடைகளில் காணப்படும் அடைப்புக்களை அகற்றிடவும், வீடுகளில் அமைந்துள்ள தண்ணீர் தொட்டிகளில் மருந்து தெளிப்பதற்கும் தினக்கூலி அடிப்படையில் 3 மாதத்திற்கு களப்பணியாளர்களை பணிக்கு அமர்த்தி பணிகள் மேற்கொள்வதற்காகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ. 5,00,000/– க்கு நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதியை பெற்று களப்பணியாளர்களை பணிக்கு அமர்த்தியுள்ளதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : 1) பணியின் முக்கியத்துவம் கருதி உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.5,00,000/–க்கு மன்ற அனுமதி வழங்கலாம்.
2) நகர்மன்ற.தலைவரின் முன்அனுமதி பெற்று களப்பணியாளர்களை பணிக்கு அமர்த்தியுள்ளதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.எச்1/1982/2012)

**தீர்மானம் எண்:267. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.12**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுப்பதற்காக பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக நகராட்சி பகுதிகள் முழுவதும் ஒலிபெருக்கி பிரச்சாரம் செய்வதற்கும், துண்டு பிரசுரங்கள் ( Bit Notice) வினியோகம் செய்வதற்கும், பத்திரிக்கைகளில் விளம்பரம் செய்வதற்கும் ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ. 25,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.எச்1/1982/2012)

**தீர்மானம் எண்:268. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.13**

இந்நகராட்சி பகுதிகளில் டெங்கு காய்ச்சல் பரவாமல் கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்வதற்காகவும், பொது சுகாதாரத்தை கருத்தில் கொண்டு புகை மருந்து அடிக்கும் இயந்திரம் வாங்குவதற்கும், அதற்கு ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.1,00,000/–க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.எச்1/3702/2009)

**தீர்மானம் எண்:269. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.14**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7–ல் அமைந்துள்ள பொது கழிப்பிடம் எண்.13, 14, 15 மற்றும் 16–ல் பராமரிப்பு பணிகளை ரூ. 2,75,000/– மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண். 65 நாள் 30.12.2011–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 27.04.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1 | திரு.ஆர்.தேவராஜ் ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.98% குறைவு |
| 2 | திரு.ஆர். ஜான் ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 1.73% கூடுதல். |

பணியின் அவசரம் கருதி இந்நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று, மதிப்பீட்டைவிட 0.98% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.ஆர்.தேவராஜ், ஒப்பந்தத்தாரரின், ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கப்பட்ட விவரம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : 1) மன்றம் பதிவு செய்யலாம்.

2) பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற.தலைவரின் முன்அனுமதி பெற்று மதிப்பீட்டைவிட 0.98% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.ஆர்.தேவராஜ், ஒப்பந்தத்தாரரின், ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கியதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/7053/2011)

**தீர்மானம் எண்:270. பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்.15**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7–ல் அந்தோணியார் காலனி பொது கழிப்பிடம் அருகில் அமைந்துள்ள மீனவர் ஓய்வறையின் தரை மிகவும் மோசமாக பழுதடைந்துள்ளது. எனவே அதனை உடைத்து அப்புறப்படுத்தி புதிதாக காங்கிரீட்டால் தரை அமைத்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ. 45,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.இ1/2252/2012)

**தீர்மானம் எண்:271. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) அ.நசீர்,
நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்(பொ)
குளச்சல் நகராட்சி